Puducherry

Regional Bulletin

Tamil

13.04.2026 18.10hrs

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 13.04.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

இந்திய மகளிர் தங்களின் கடின உழைப்பு, தைரியம் மற்றும் தன்னம்பிக்கையின் மூலம் புதிய உயரங்களை எட்டியுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஜாலியன் வாலாபாக்கில் உயிர்த்தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

தமிழ் புத்தாண்டு நாளை கொண்டாடப் படுவதையொட்டி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வரும் 23ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற உள்ள நிலையில், கட்சித் தலைவர்களின் பரப்புரை தீவிரமடைந்துள்ளது.

*பிரதமர் நாரி சக்தி -1 (7)*

இந்திய மகளிர் தங்களின் கடின உழைப்பு, தைரியம் மற்றும் தன்னம்பிக்கையின் மூலம் புதிய உயரங்களை எட்டியுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற

நாரி சக்தி வந்தன் சம்மேளனத்தில் உரையாற்றிய அவர், 21ஆம் நூற்றாண்டில் மிகப் பெரிய முடிவுகளில் ஒன்றை இந்தியா எடுக்கப் போவதாகவும், இந்த முடிவு பெண்களின் அதிகார மேம்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

(வாய்ஸ்)

*பிரதமர் நாரி சக்தி – 2 (16)*

(வாய்ஸ்)

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், கடந்த கால மற்றும் எதிர்காலத்தின் விருப்பங்களை நிறைவேற்றும் ஒரு புதிய வரலாற்றை உருவாக்கும் இடத்தில், நாடாளுமன்றம் தற்போது உள்ளதாக தெரிவித்த அவர், மாநில சட்டமன்றங்கள் முதல் நாட்டின் நாடாளுமன்றம் வரை, பல 10 ஆண்டுகளாக நீடித்த ஒரு காத்திருப்பு இம்மாதம் 16, 17 மற்றும் 18ஆம் தேதிகளில் முடிவுக்கு வரும் என்றும் கூறினார்.

2023ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில், நாரிசக்தி வந்தன் அதினியம் என்ற திட்டத்தின் வடிவத்தில், அரசு முதலடியை எடுத்து வைத்துள்ளது என்றும், இதன் மூலம் அத்திட்டத்தை உரிய நேரத்தில் செயல்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார். ஜனநாயக கட்டமைப்பில் மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்திய பிரதமர், மகளிர் பங்களிப்பு நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்துகிறது என்றார்.

சுதந்திரப் போராட்டம் முதல் அரசியல் அமைப்பு சபையின் முடிவுகள் வரை, சுதந்திர இந்தியாவின் அடித்தளங்களை அமைப்பதில் இந்திய மகளிர் மகத்தான பங்களிப்பை வழங்கி உள்ளதாகவும், பிரதமர் குறிப்பிட்டார்.

*பிரதமர் நாரி சக்தி – 3 (12)*

குடியரசு தலைவர் முதல், பிரதமர் வரை, பெண்கள் வகித்த பதவிகள் அனைத்திலும், அவர்கள் தங்களுக்கென தனித்துவமான மரபுகளை உருவாக்கி உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் பெண்களின் தலைமைத்துவத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு என்று தெரிவித்த பிரதமர், இன்று, இந்தியா முழுவதும் 14 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் வெற்றிகரமாக பணியாற்றி வருவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி, நாரி சக்தி வந்தன் அதினியம், பெண்களின் அதிகாரமளித்தல், சுயமரியாதை மற்றும் ஜனநாயக பங்கேற்பை உறுதி செய்கிறது என்று கூறினார். இன்று, நாட்டின் மகள்கள் தேசத்தின் வளர்ச்சிப் பயணத்தில் முன்னணியில் இருப்பதாகத் தெரிவித்தார்.

*கட்சிகள் உத்தரவு (14)*

காங்கிரஸ், ஐக்கிய ஜனதாதளம், லோக் ஜனசக்தி ஆகிய கட்சிகள், தங்களது மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் வரும் 16ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை அவையில் ஆஜராக வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளன. வரவிருக்கின்ற நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவையில் ஆஜராகி, கட்சியின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் இந்த கட்சிகள் அறிவுறுத்தி உள்ளன. வரும் 16ஆம் தேதி முதல் 3 நாட்களுக்கு சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற உள்ளது. இதில், பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதாவை நிறைவேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

முன்னதாக, பிஜேபியும் தங்களது மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் இந்த 3 நாட்களில் அவையில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

*ஜாலியன் வாலாபாக் -1 (14)*

பஞ்சாபின் அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில், 1919ஆம் ஆண்டு, அன்றைய பிரிட்டிஷ் அரசால் கொடூரமாகக் கொல்லப்பட்ட நூற்றுக் கணக்கான அப்பாவி மக்களுக்கு தேசம் இன்று அஞ்சலி செலுத்தியது. அந்த படுகொலை இந்தியாவின் சுதந்திர இயக்கத்தை மேலும் தூண்டிவிட்டது. ஜாலியன் வாலாபாக் தேசிய அறக்கட்டளை சார்பில் 107ஆவது தியாகிகள் தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

1919ஆம் ஆண்டின் இதே நாளில் ஜாலியன் வாலாபாக்கில் வீர மரணமடைந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, அஞ்சலி செலுத்தினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், தேசம் அவர்களுக்கு என்றென்றும் நன்றியுடன் இருக்கும் என குறிப்பிட்டுள்ள குடியரசுத் தலைவர் அவர்களின் தேசபக்தி உணர்வானது, நம் அனைவருக்கும் அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் தேசிய சேவைப் பாதையில் முன்னேற தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

*ஜாலியன் வாலாபாக் - 2 (14)*

பிரதமர் திரு. நரேந்திரமோடி, இன்று, ஜாலியன் வாலாபாக் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினார். அவர்கள் வெளிப்படுத்திய தைரியமும், அசைக்க முடியாத உறுதியும், வருங்கால தலைமுறையினருக்கு சுதந்திரம், நீதி மற்றும் கண்ணியம் ஆகிய விழுமியங்களை காக்க தொடர்ந்து உத்வேகம்

அளித்து வருகிறது என்று பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்த ஈவு - இரக்கமற்ற பிரிட்டிஷ் ஆட்சியின் செயலானது ஒட்டுமொத்த தேசத்தையும் உலுக்கியதோடு, பகத் சிங் மற்றும் உத்தம் சிங் போன்ற புரட்சியாளர்களின் இதயங்களில் சுதந்திர வேட்கையை தீவிரமாக தூண்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களின் துணிச்சலானது நீதி, கண்ணியம் மற்றும் சுய மரியாதைக்காக குரல் கொடுக்க மக்களை தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

*கிஷண் ரெட்டி (10)*

நாட்டின் சுயசார்பு பாரத கனவை நனவாக்குவதில், அரியவகை கனிமங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக, மத்திய நிலக்கரி மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெறும் அரியவகை கனிமங்களின் ஏலம் தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பேசிய அவர், இதுவரை நடைபெற்ற 6 சுற்றுக்களில் 46 அரியவகை கனிமங்கள் ஏலத்திற்கு விடப்பட்டுள்ளதாகவும், 7ஆவது சுற்றில் 19 கனிமங்களின் ஏலம் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

கனிம வளத்துறையில், இந்தியா முன்னோடி நாடாக உருவெடுக்க இத்துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

*தமிழ் புத்தாண்டு வாழ்த்து (15)*

தமிழ் புத்தாண்டு நாளை கொண்டாடப் படுவதையொட்டி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் என்று தெரிவித்துள்ளார். மேலும், மலையாள மொழி பேசும் மக்களுக்கு விஷு மலையாள புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். நம்முடைய பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் எடுத்துக் காட்டும் இந்த புத்தாண்டு கொண்டாட்டங்கள், அனைவரின் வாழ்விலும், நம்பிக்கை, செழிப்பு மற்றும் மகிழ்ச்சியை கொண்டு வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த புத்தாண்டில் நம்முடைய முயற்சிகள் அனைத்திலும் வெற்றியாக மலர்ந்து, வாழ்வில் ஆரோக்கியம் நிறைந்த ஆண்டாக அமையட்டும் என்றும், அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை பகிர்ந்து நாம், புத்தாண்டை வரவேற்போம் என்று திரு. கைலாஷ்நாதன் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

*மீன்பிடி தடைகாலம் (10)*

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில், மீன்களின் இனப்பெருக்கத்தை பாதுகாக்கும் வகையில், இம்மாதம் 15ஆம் தேதி முதல் 61 நாட்களுக்கு மீன்பிடி தடைகாலம் அமல்படுத்தப்பட உள்ளது. அதன்படி, ஜுன் மாதம் 15ஆம் தேதி வரை மீன்பிடி தடைக்காலம் அமலில் இருக்கும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களில் இந்த தடைகாலத்தில் மீன் பிடிக்க கடலுக்குள் செல்லக் கூடாது என்று மீன்வளத்துறை ஏற்கனவே அறிவுறுத்தி உள்ளது. மேலும், கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றுள்ள விசைப் படகுகள், இழுவைப் படகுகள் உட்பட அனைத்து படகுகளும் நாளை இரவு 12 மணிக்குள் கரை திரும்ப வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

*மதுக்கடை மூடல் (5)*

தமிழகத்தில் வரும் 23ஆம் தேதி நடைபெறும் சட்டமன்றத் தேர்தலையொட்டி, தமிழகத்தைச் சுற்றியுள்ள புதுச்சேரி மற்றும்

காரைக்காலில், 21ஆம் தேதி முதல் 23ஆம் தேதி வரை, 3 நாட்களுக்கு அனைத்து விதமான மதுபானக் கடைகள், கள் மற்றும் சாராயக் கடைகளை மூட புதுச்சேரி கலால்துறை உத்தரவிட்டுள்ளது.

*தமிழக பிரச்சாரம் -1 (3)*

தமிழ்நாட்டில் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வரும் 23ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. இதனையொட்டி, கட்சித் தலைவர்களின் பரப்புரை தீவிரமடைந்துள்ளது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

(வாய்ஸ்)

*தமிழக பிரச்சாரம் - 2 (16)*

(வாய்ஸ்)

பிஜேபின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, தமிழக பிஜேபி வாக்குச் சாவடி முகவர்களுடன் தேர்தல் பணி தொடர்பாக இன்று காணொளி வாயிலாக உரையாடினார்.

திமுக தலைவர் திரு. மு.க ஸ்டாலின் இன்று திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, திருத்தணி, பூவிருந்தவல்லி ஆகிய தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டார்.

அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, மயிலாடுதுறை, திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் பரப்புரை மேற்கொண்டார். சிவகாசி பகுதியில் தமிழ்நாடு பிஜேபி தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

திண்டுக்கல் பகுதிகளில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான், விருத்தாச்சலம் சட்டமன்றத் தொகுதியில் தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த், தர்மபுரியில், பாமக வேட்பாளர் திருமதி. சவுமியா அன்புமணி,

திருநெல்வேலியில், திமுக துணைப் பொதுச் செயலாளர் திருமதி. கனிமொழி, உள்ளிட்ட தலைவர்களும் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

*ஆஷா போஸ்லே (10)*

உடல்நலக் குறைவு காரணமாக மும்பையில் நேற்று காலமான பிரபல இந்தி திரைப்பட பின்னணிப் பாடகி ஆஷா போஸ்லேவின் உடலுக்கு, தாதரில் உள்ள மின் மயானத்தில், இன்று மாலை இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. முன்னதாக, மும்பையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக மூவர்ணக் கொடியால் போர்த்தப்பட்டு, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அவரது உடலுக்கு மகாராஷ்டிர ஆளுநர் திரு. ஜிஷ்ணு தேவ் வர்மா, அமைச்சர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், திரைப்பட நடிகர்கள், இசை அமைப்பாளர் A.R. ரஹ்மான், கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் பொதுமக்கள் என பலரும் அஞ்சலி செலுத்தினர்.

*விமானம் மின்சாரம் (10)*

மின்சார உந்து சக்தியின் மூலம் Take Off எனப்படும் விமானங்கள் மேலெழும்புவதற்கான தொழில்நுட்பம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இந்திய தொழில்நுட்ப வாரியம் மற்றும் Casey விமான நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தாகி உள்ளது. இது குறித்து மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு இந்த நவீன தொழில்நுட்பம் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது. குறைந்த தூர ஓடு தளத்தில், விமானத்தை Take Off செய்வதற்கும், சிறிய வகை விமானங்கள் செங்குத்தாக மேலெழும்பிச் செல்வதற்கும் இந்த தொழில்நுட்பம் பயன்படும் என்று அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

*ஈரான் தூதர் (13)*

இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட பெரிய நாடுகள் மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட மேற்கொள்ளும் முயற்சிகளை வரவேற்பதாக,

இந்தியாவிற்கான ஈரான் தூதர் திரு. Saeid Reza Mosayeb தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவின் ராஜ்ய ரீதியிலான அணுகுமுறை வரவேற்கத் தக்கது என்று தெரிவித்தார். ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல் நடவடிக்கைகளை இந்த நாடுகள் ஆதரிக்கவில்லை என்றும், ராணுவ ரீதியாக இந்த போர்ச் சூழலில் ஈடுபட விருப்பம் இல்லை என்று, இந்த 3 நாடுகளும் தெளிவாகக் கூறியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

போர்ச் சூழலை கட்டுக்குள் கொண்டுவந்து, உலக வணிக நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ள இந்தியா, சீனா, ரஷ்யா முயற்சி எடுத்து வருவதாகவும், இந்தியாவிற்கான ஈரான் தூதர் தெரிவித்தார்.

*கிரிக்கெட் (2)*

ஐதராபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு தொடங்கும், ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டியில், ஐதராபாத் அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்திய மகளிர் தங்களின் கடின உழைப்பு, தைரியம் மற்றும் தன்னம்பிக்கையின் மூலம் புதிய உயரங்களை எட்டியுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஜாலியன் வாலாபாக்கில் உயிர்த்தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

தமிழ் புத்தாண்டு நாளை கொண்டாடப் படுவதையொட்டி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வரும் 23ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற உள்ள நிலையில், கட்சித் தலைவர்களின் பரப்புரை தீவிரமடைந்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. BI / MS / RK